**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 25 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 06.02.2024 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பெயர் Senthoor Pandian (P.W.3)

வாதி தரப்பு சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்தில் இருந்து இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கக்கோரி எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். ஆகவே இந்த வழக்கைப்பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொல்வது தவறு. வாதி இந்த வழக்கை பற்றிய விவரங்களை என்னிடம் கூறியுள்ளார். வாதி கூறியதன் அடிப்படையில் தான் இந்த பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்துள்ளேன் என்று சொல்வது தவறு. தெரிந்த விவரங்களை கூறுகிறேன் என்று சாட்சி கூறுகிறார். வாதி செல்வராஜ் இதற்கு முன்பு வேறு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிற்கு முன்பு நில பிரச்சினை தொடர்பாக காவல்நிலையம் சென்றபோது நான் உடன் சென்றிருந்தேன். தாவா சொத்து ஆரம்பத்தில் யார் பெயரில் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஆரம்பத்தில் எவ்வளவு இருந்தது என்ற விவரமம் எனக்கு தெரியாது. தாவா சொத்து அருளாந்தநகர் பிளாட் எண். 18 மற்றும் 19ல் அமைந்துள்ளது.

2. பிளாட் எண். 18 மற்றும் 19ன் சர்வே எண். 34/1ஏ2 மற்றும் 34/1பி1பி2 ஆகும். பிளாட் எண். 18ன் மொத்த விஸ்தீரணம் 2280 சதுரடி ஆகும். பிளாட் எண். 19ன் மொத்த விஸ்தீரணம் 2500 சதுரடி ஆகும். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பிளாட் எண்.18 மற்றும் 19ன் மொத்த விஸ்தீரணம் 5586 சதுரடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிளாட் எண்.18 மற்றும் 19ன் விஸ்தீரணத்தை கூட்டினால் 5586 சதுரடி வராது என்றால் வழிப்பாதை 806 சதுரடி இடத்தை சேர்த்தால் வரும் என்று சாட்சி கூறுகிறார். மேற்சொன்ன வழிப்பாதை விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதசாஆ. 1ல் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. சகாதேவன் எப்படி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் சகாதேவனின் இறுதி அஞ்சலியில் நான் கலந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி புவனேஸ்வரி பிளாட் எண். 19ல் தென்பகுதியில் 1262 சதுரடி நிலத்தை 19.03.1999அன்று கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த இடத்தில் 1ம் பிரதிவாதி புவனேஸ்வரி அந்த பகுதியில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் மேற்கு பகுதியில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றும் தெற்கு பகுதியில் வாங்கிவிட்டு மேற்கு பக்கம் வசிப்பதாக சாட்சி கூறுகிறார். நான் சொல்வது தவறு என்றும் 1ம் பிரதிவாதி புவனேஸ்வரி தான் வாங்கிய சொத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் வாங்கிய இடத்தில் வீடு கட்டாமல் வேறு இடத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்று சாட்சி கூறுகிறார்.

3. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண். 4ல் 1ம் பிரதிவாதி பட்டா வாங்க முற்பட்ட போது வாதி தடுத்தார் என்றும் நான் உடன் சென்றதாக கூறியுள்ளேன். வட்டாட்சியர் அவர்கள் இது சம்பந்தமாக விசாரணை செய்தபோது நான் அவர் முன்பு ஆஜர் ஆகி விளக்கம் அளிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண். 4ல் 1ம் பிரதிவாதி உண்மைக்கு புறம்பாக பொய்யான தகவலை கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றும் 1ம் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும் வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை படித்துப்பார்க்காமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான தகவல் என்று வாதிக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதசாஆ.1 வாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தில் ராஜேந்திரன் மற்றும் கண்ணன் ஆகியோர் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதி பெற்ற கிரைய ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் இட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. நான் உண்மையிலேயே வாதி பத்திரப்பதிவு செய்தபோது உடன் சென்றிருந்தால் வாதியின் கிரையப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் 2ம் பிரதிவாதி என் நண்பர் என்பதால் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 25.06.2014ல் மாதவரம் காவல்நிலையத்தில் ஒரு புகாரினை வாதிக்கு எதிராக கொடுத்துள்ளார் என்றால் 2015ம் ஆண்டு தான் புகார் கொடுத்ததாக சாட்சி கூறுகிறார். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. வாதி 1ம்பிரதிவாதியின் மீது எப்போது புகார் கொடுத்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாதி என் நண்பர் என்ற காரணத்திற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

Sd/- M. Vasantha Kumar,
Subordinate Judge,
Thiruvottiyur.